விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 231 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 22 வியாழக்கிழமை (07.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## உங்கள் கரிசனை எனது அறிக்கையில் பிரதிபலிக்கும்

### அரசியல் கட்சிகள், சிவில் சமூகத்துக்கு வோல்கர் பதில் கடிதம்

(ஜெனிவா)

உங்கள் கடிதத்தில் முன்வைக்கப்பட்ட கரிசனைகள் எனது அறிக்கையில் பிரதிபலிக்கும் என அரசியல் கட்சிகள், சிவில் சமூகத்துக்கு அனுப்பி வைத்த பதில் கடிதத்தில் ஐக்கிய நாடுகள் மனித 16ஆம் பக்கம் பார்க்க

### காலில் செருப்பு, இடுப்பில் தாயத்து

## மனித என்புத் தொகுதி செம்மணியில் அகழ்ந்தெடுப்பு



(யாழ்ப்பாணம்)

காலில் செருப்பு, இடுப்பில் தாயத்துடன் செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து மனித என்புத் தொகுதி ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## ஸ்கான் அறிக்கை

### எதிர்வரும் 14ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி வளாகத்தில் கடந்த இரு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் ஆய்வு அறிக்கைகள் எதிர்வரும் 14ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உறவுகள் சார்பில் முன் 15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில்

# சிசுவின் மனித எச்சம் அகழ்ந்து எடுப்பு

### பதறவைக்கும் செம்மணிப் புதைகுழி மர்மங்கள்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் சிசு ஒன்றின் மனித எச்சம் நேற்றுப் புதன்கிழமை யாழ்.நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் அகழ்ந்தெடுக்கப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)



### முன்னாள் இராஜாங்க அமைச்சர்

## சஷிந்திர ராஜபக்ஷ கைதாகி மறியலில்



15ஆம் பக்கம் பார்க்க

## 14ஆம் திகதி திறந்த மன்றில் செம்மணி வழக்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 14ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு திறந்த மன்றில் யாழ்.நீதவான் நீதி 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வு தற்காலிகமாக நிறுத்தம்

- எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் அகழ்வு ஆரம்பம்
- நேற்றும் 6 மனித எச்சங்கள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நேற்றுடன் நிறுத்தப்பட்டுள்ளதோடு எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப் 15ஆம் பக்கம் பார்க்க

### செம்மணியில்

## தாயம், காசு, செருப்பு மீட்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து தாயம், காசு, செருப்பு உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் விபத்து: ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏ9 வீதி கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் திருகோணமலையைச் சேர்ந்த 55 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்தவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க

## சம்பூரில் மனித எலும்புக்கூடுகள்

### அகழ்வுகளைத் தொடர நீதிமன்றம் உத்தரவு

(திருகோணமலை)

மனித எலும்பு எச்சங்கள் காணப்பட்ட சம்பூர் காணியில் மேலும் மனித எலும்புக் கூடுகள் மற்றும் எச்சங்கள் உள்ளனவா என்பதை அறிய, கிழக்கு பிராந்திய இராணுவ கட்டளைத் தளபதியின் ஆலோசனையைப் பெற்று இராணுவ ஆளணியின் உதவியுடன் முறைப்படி அகழ்வு நடத்துமாறு மூதூர் நீதவான் தஸ்னீம் பௌஸான் நேற்று உத்தரவிட்டார்.

மேலும் இது தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் 26ஆம் திகதி எடுத்துக் கொள்வதாகவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன் இதுவரை அங்கு கண்டெடுக்கப்பட்ட மூன்று எலும்புக்கூடுகளில் ஒன்று, 25 வயதிற்கு குறைந்த ஆண் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்

**சபைக்குச் சொந்தமான சங்கானை மரக்கறிச் சந்தை வளாகத்தில் கிழக்குப் புறமாக புதிதாக அமைக்கப்பட்ட மேல்மாடி கடைகள், சங்கரத்தை சந்தை மேல்மாடி கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்**

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2025.08.07 - 2025.08.28 பி.ப 03.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2025.08.28 மு.ப 10.30 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2025.08.28 மு.ப 10.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் இடம் :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம்

நீண்டகால குத்தகை

அட்டவணை I

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| Oodakarai Lane- Upper Floor | | | | | |
| 01 | Shop 11 FF | 7,000.00 | 1,260,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 02 | Shop 12 FF | 7,000.00 | 1,260,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 03 | Shop 13 FF | 7,000.00 | 1,260,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 04 | Shop 15 FF | 7,000.00 | 1,260,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 05 | Shop 16 FF | 3,500.00 | 630,000.00 | 100,000.00 | 2,000.00 |

அட்டவணை II

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| Upper Floor Shop – Sangaraththai Market Vaddukoddai | | | | | |
| 01 | Shop UF01 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 02 | Shop UF02 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 03 | Shop UF03 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 04 | Shop UF04 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 05 | Shop UF05 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |

நிபந்தனைகள்

அட்டவணை I

விண்ணப்பதாரி இலங்கையில் நிரந்தர வசிப்பிடமாக இருத்தல் வேண்டும்.

அட்டவணை II

விண்ணப்பதாரி வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

1) கேள்விப் பத்திரம்/பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2) கடை வாடகை சம்பந்தமாக சபையினால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையை குறித்த மாத இறுதிக்கு முன் செலுத்தி பற்றுச்சீட்டு பெறுவதற்கும் இக்கால எல்லைக்குப் பிந்திச் செலுத்தப்படும் வாடகைத் தொகையின் 10% தண்டப்பணம் செலுத்துவதற்கும், தொடர்ந்து மூன்று மாதங்கள் பணம் செலுத்தத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
3) கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு 28.08.2025 ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம்முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கபெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
4) சித்திகர கேள்விதாரராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டால் 04.09.2025 ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரே தடைவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினைப் பெற்று வியாபாரம் அல்லது தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்பதனுடன் தகுந்த காரணங்களின்றி வியாபார நிலையம் பூட்டி வைத்தல் கூடாது.
5) சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதோ அல்லது மதுபான வகைகளையோ அல்லது போதைவஸ்துக்களையோ அல்லது தடை செய்யப்பட்ட வேறு எந்தப் பொருட்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன் கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
6) சித்திபெற்ற குத்தகைக்காரர் வலிகாமம் மேற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
7) சித்திபெற்ற குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
8) சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமைச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
9) மேலதிக விபரங்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பெறுகைக்குழு**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**07.08.2025**

(C-3589)

# மரண அறிவித்தல்

## கணேசு புவனேஸ்வரி



மலர்வு 03.04.1937 உதிர்வு 06.08.2025

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.06, D -10 உருத்திரபுரத்தையும் லண்டனையும் நிரந்தர வதிவிடமாகவும் இல.14 தூலாக்கட்டு வீரணங்கல் நெல்லியடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணேசு புவனேஸ்வரி அவர்கள் நேற்று (06.08.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி கணேசு (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் ஜனார்த்தனன் (முன்னாள் கமநலசேவை உத்தியோகத்தர்), ஜெயவேந்தி (லண்டன்), இளவேந்தி (அதிபர் - கிளி/கிளிநொச்சி ம.வி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அருளம்பலம் (முன்னாள் விவாக பிறப்பு இறப்பு பதிவாளர் - கிளிநொச்சி), இ.திலகவதி (வட்டக்கச்சி), காலஞ்சென்ற ஏகாம்பரம் (முன்னாள் சமாதான நீதவான்), காலஞ்சென்ற ஞானாம்பாள் ஆகியோரின் சகோதரியும் சிவாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் திட்டமிடல் - பிரதேச செயலகம், கரவெட்டி), சிவகுமார் (லண்டன்), நிர்மலராஜ் ஆகியோரின் மாமியாரும் ஜ.ஹரிஸ்மேனன் (பொறியியல் மாணவன் - மொரட்டுவ), மிர்ணாலினி (விஞ்ஞான பீட மாணவி - களனிப்பல்கலைக் கழகம்), ஜானகன் (பொறியியல் மாணவன் - லண்டன்), மகிசன் (லண்டன்), ஹரினி (மாணவி - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), புகழ்லினி (மாணவி - கிளி/கிளிநொச்சி ம.வி) ஆகியோரின் பேர்த்தியும் இராசரத்தினம், பாக்கியலட்சுமி, மனோகரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.08.2025 வியாழக்கிழமை இரும்பு மதவடி வதிரியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :* குடும்பத்தினர்
ஜனார்த்தனன் (மகன்) - 074 290 0694
இளவேந்தி (மகள்) - 077 452 9019

(C - 3592)

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 - 11 - 1962



இறப்பு 06 - 08 - 2025

## நவரத்தினம் குணசீலன்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் குணசீலன் அவர்கள் நேற்று (06.08.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குணசீலன் சசிகலா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - அரியமலர் தம்பதியினரின் அன்பு மருமகனும் சந்திரலீலா, திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் குருபரன், ஸ்ரீபரன், துஷ்யந்தி, சஜீபரன், சுஜித்தா, அபிராமி, ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனுசா, பிரதீசன், கவிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காளி கோவிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

*தகவல் :* குடும்பத்தினர்
077 172 8334
077 418 6055

(4990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க பாடசாலைகளில் இணையும் மாணவர் தொகையில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு) ..........................

**இலங்கையில் முதலாம் ஆண்டிற்கு அரசாங்க பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் எண்ணிக்கையில் பாரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 3 60,000 ஆக இருந்த முதலாம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டில் 2 98,000 ஆகக் குறைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதுவொரு ஆபத்தான வீழ்ச்சி என புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பிய ரவி கருணாநாயக்க, அதனை சரி செய்ய அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து அவர் குறிப்பிட்டார்.

பிறப்பு எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவு இதற்கான பிரதான காரணமாகும். மேலும் கணிப்பின்படி, இந்த எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 196, 209 ஆக குறையலாம் என கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரட்ன குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளில் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டு 298, 959 ஆகவும், 2022 ஆம் ஆண்டு 303,868 ஆகவும், இருந்தது

இந்த ஆபத்தான நிலையைச் சீர்செய்ய எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். (நி)

# கோபா குழு தலைவர் ராஜினாமா

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை ஒன்றை ஆற்றிய போதே அவர் தனது இராஜினாமாவை அறிவித்தார்.

அரசாங்கக் கணக்குகள் குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க இணக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் அதற்கு வழி வகுக்கும் வகையில் அவர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக குறிப்பிட்டார். (நி)

# உறவினர்களுக்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்ற அரசியல்வாதிகளின் பட்டியல்



(கொழும்பு)

2005-2014 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில், ஜனாதிபதி நிதியத்திலிருந்து வெளிநாட்டில் கல்வி கற்பதற்காக அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்களுக்கு மற்றும் நெருக்கமானவர்களுக்கு பல மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் வாய்மொழி மூல விடைக்கான கேள்வி நேரத்தில் முன்வைக்கப்பட்ட வினாக்களுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்வாறு நிதியை பெற்றவர்கள் தொடர்பான தகவல்களை தாம் சபைக்கு சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்த அவர், அவர்களில் சிலரின் பெயர்களை பாராளுமன்றில் அறிவித்தார்.

விசேடமாக 2005 ஆம் ஆண்டில் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரத்சந்திர ராஜகருணாவினால் அவரது மகனான ஹர்ஷன சுபுன் ராஜ கருணாவின் (பாராளுன்ற உறுப்பினர்) உயர்கல்விக்காக நிதியைப் பெற்றுள்ளார்.

அதேபோல, 2006 ஆம் ஆண்டில், கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கருணாசேன கொடித்துவக்கு தமது உறவினரான ஐ.என். கொடித்து வக்கு என்பவருக்காக நிதியைப் பெற்றுள் ளார்.

2006 ஆம் ஆண்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக (தேசியப் பட்டியல்) இருந்த வீ. ராதாகிருஷ்ணன், திருமதி. கே. ராதாகிருஷ்ணன் என்பவருக்காக நிதியைப் பெற்றுக்கொடுத்துள்ளார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் மேலும் பலர் இவ்வாறு நிதியைப் பெற்றுள்ளதாகவும் அவர்களுக்காக பல மில்லியன் ரூபாய் ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், புலமைப் பரிசில் பெற்று வெளிநாடுகளுக்காக கல்விகற்பதற்கு சென்று நாடு திரும்பாதவர்கள் தொடர்பில் இதுவரையில் எந்த நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை எனவும் அமைச்சர் அருண கருணாதிலக்க தெரி வித்தார்.

இதேவேளை, குறித்த பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீ. ராதாகிருஷ்ணன் தாம் அல்லவெனவும், குறித்த காலப் பகுதியிலோ அதற்கு முன்னதாகவோ தாம் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் குறிப்பிடும் காலப்பகுதியில் தமது பெயரில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருந்தமையினால் அவரது பெயருக்குப் பதிலாக தமது பெயர் தவறாக குறிப்பிடப்பட்டிருக்கலாம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். (நி)

# செம்மணியில் அடையாளம் காணும் தீர்மானத்தை வரவேற்றுள்ள ஐ.நா

(ஜெனீவா)

UNITED NATIONS
SRI LANKA

செம்மணி மற்றும் கொக்குத்தொடுவாய் கூட்டுப் புதைகுழித் தளங்களிலிருந்து மீட்கப்பட்ட தனிப்பட்ட உடைமைகளை அடையாளம் காண்பதில் பொது மக்களின் உதவியை நாடும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

“செம்மணி, கொக்குத்தொடுவாய் கூட்டுப் புதைகுழித் தளங்களிலிருந்து மீட்கப்பட்ட தனிப்பட்ட உடைமைகளை அடையாளம் காண்பதில் பொது மக்களின் உதவியை நாடும் தீர்மானம் இலங்கையில் உண்மை மற்றும் நீதி நல்லிணக்கத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப் பட்ட ஒரு நடவடிக்கையாகும்.

பல தசாப்தங்களாக தங்கள் அன்புக்குரியவர்களின் நிலை குறித்து அயராது திடமாக பதில்களைத் தேடி வரும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுடன் ஐக்கிய நாடுகள் இலங்கை உறுதியாக நிற்கிறது.

நீதி மற்றும் உண்மையைப் பின் தொடர்வதில் அவர்களின் தாங்குதன்மை ஒரு தார்மீக வழிகாட்டியாகத் தொடர்ந்து செயற்படுகிறது.

இலங்கை அரசாங்கம், குறிப்பாக காணாமல் போனோர் அலுவலகம், தங்கள் பணியை வெளிப்படைத் தன்மையுடனும் விரைவுடனும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுடன் அர்த்தமுள்ள ஆலோசனையுடனும் நிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)







யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு நல்லூர் மஹோற்சவ காலத்தில் வெளியிடுகின்ற நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவும் யாழ்.விருது வழங்கும் நிகழ்வும் நேற்று நல்லூர் ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். மாநகர ஆணையாளர் ச. கிருஸ்னேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நல்லைக்குமரன் மலரினை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாநகர முதல்வர் வி. மதிவதனி வெளியிட்டு வைத்தார். இந் நிகழ்வில் உயிரியல் ஆசான் சி. குணசீலனுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான “யாழ்விருது” வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## பாலஸ்தீன ஆதரவு பிரசாரம் இலங்கை வீரருக்கு அபராதம்




இலங்கை உதைபந்து அணி வீரர் முஹமட் தில்ஹாம், கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற சர்வதேச உதைபந்து போட்டியின்போது பாலஸ்தீனத்தை ஆதரித்து அரசியல் செய்தியை வெளியிட்டதற்காக அவருக்கு சர்வதேச உதைபந்து சம்மேளனம் 2 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதித்துள்ளது.

கடந்த ஜூன் 10 ஆம் திகதி கொழும்பில் உள்ள ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ஏ.எப்.சி ஆசியகிண்ணம் 2027 தகுதிச் சுற்றில் இலங்கை அணி, சீன தாய்பேயை 3-1 என்ற கணக்கில் தோற்கடித்ததை தொடர்ந்து தில்ஹாம் போட்டிக்குப் பிந்தைய கொண்டாட்டத்தில் தனது அணியினருடன் சேர்ந்து, தனது ஜெர்சியை உயர்த்தி, தனது உள்ளாடையின் மீது எழுதப் பட்ட "பாலஸ்தீனத்தின் விடு தலைக்காக பிரார்த்தனை செய்யுங்கள்" என்ற வாசகங்களை வெளிப் படுத்தினார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. குறித்த போட்டியில் தில்ஹாம் விளையாடவில்லை என்றாலும், ஆசிய உதைபந்து கூட்டமைப்புடன் ஒருங்கிணைந்து, சர்வதேச உதைபந்து சம்மேளனம் அதன் ஒழுங்குமுறை குறியீட்டை மீறியதாகக் குறிப்பிட்டது. இது போட்டிகள் அல்லது தொடர்புடைய நிகழ்வுகளின் போது அரசியல், மத அல்லது தனிப்பட்ட வாசகங்களைத் தடைசெய்கிறது.

இதன் விளைவாக, தில்ஹாமுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இது உதைபந்தில் அரசியல் நடுநிலையைப் பேணுவதில் சர்வதேச உதைபந்து சம்மேளனத்தின் கடுமையான நிலைப்பாட்டை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது. (3)



யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் வினையாட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

## மாபெரும் கரப்பந்தாட்ட போட்டியில் மாமுனை கலைமகள் அணி சம்பியன்



மாமுனை கலைமகள் விளையாட்டு கழகத்தினர் நடத்தும் மாபெரும் கரப்பந்தாட்ட தொடரானது கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாமுனை கலைமகள் கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் சுற்றுப்போட்டியில் பல பெண்கள் அணிகள் தமது திறமையை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தனர்.

பலத்த போட்டியின் மத்தியில் இடம் பெற்ற இவ் சுற்றுப்போட்டியில் இறுதி போட்டிக்கு மாமுனை கலைமகள் விளையாட்டு கழகத்தினரை எதிர்த்து செம்பியன் பற்று செம்பியன் விளையாட்டு கழகத்தினர் மோதினர்.

இவ் இறுதி போட்டியில் 25:14 எனும் புள்ளிகள் அடிப்படையில் முதல் சுற்றில் மாமுனை கலைமகள் விளையாட்டு கழகத்தினர் முன்னிலை வகித்தனர் பின் பலத்த எதிர்பார்ப்புடன் அடுத்த சுற்றானதும் இடம்பெற்றது. இவ் சுற்றிலும் 25:18 எனும் புள்ளிகளின் அடிப்படையில் மாமுனை கலைமகள் விளையாட்டு கழகத்தினர் முன்னிலை வகித்து வெற்றியை தமதாக்கி கொண்டனர். (3)

## இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் முறியடிக்கப்பட்ட வரலாற்று சாதனை




இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் சமநிலையில் முடிவடைந்ததோடு பல வரலாற்றுச் சாதனைகளும் முறியடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியா- இங்கிலாந்து 5ஆவது டெஸ்டில் இந்தியா 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. டெஸ்ட் போட்டிகளில் இந்தியா, மிகக் குறைந்த ஓட்ட வித்தியாசத்தில் அடைந்த வெற்றி இதுவே. இதற்கு முன், 2004இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 13 ஓட்ட வித்தியாசத்தில் இந்தியா வென்றுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிகளில் 6000ஓட்டங்களை கடந்த முதல் வீரராகவும் உள்ளூர் போட்டிகளில் 24 சதங்கள் விளாசிய முதல் வீரராகவும் இங்கிலாந்தின் ஜோ ரூட் சாதனை படைத்துள்ளார்.

இந்திய டெஸ்ட் அணித்தலைவராக அதிக ஓட்டங்கள் குவித்த வீரராக, 754 ஓட்டங்களுடன் சுப்மன் கில் சாதனை படைத்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான டெஸ்ட் தொடர்களில் 6 முறை 50இற்கு கூடுதல் ஓட்டங்கள் குவித்த முதல் வீரராக ரவீந்திர ஜடேஜா சாதனை படைத்துள்ளார். இந்த தொடரில் 500 ஓட்டங்களை அவர் கடந்துள்ளார்.

இங்கிலாந்து அணியுடனான, ஆண்டர்சன் - டெண்டுல்கர் கோப்பைக்கான 5 டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய நாயகனாக, இந்திய வீரர் முகம்மது சிராஜ் உருவெடுத்துள்ளார். இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருந்த இங்கிலாந்தின் ஜோஷ் டங்கை முந்தி, சிராஜ் 23 விக்கெட்டுகளுடன் புதிய சாதனை படைத்துள்ளார். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

### தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு, சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகை - 2025.09.08 தொடக்கம் 2026.08.31 வரை

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவை வழங்குவதற்குத் தகைமையுள்ள தனித்தனியாக விலைமனுதாரர்களிடமிருந்து பொறிமுறைப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்கவேண்டியநிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2025/ 01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) **மொத்தம் 17 வைத்தியசாலைகள்** | தலா ரூபா 30,000.00 |

01.பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02.ஒப்பந்த அளிப்பு செய்வதற்கும் ஒப்பந்த அறிக்கை பெறுவதற்கும், வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றிருக்கலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ.விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ.அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின்/ சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03.ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04.ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் நேரிலும் 021 222 6253, 021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05.ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் **06.08.2025** ஆம் திகதி முதல் **19.08.2025** ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கை யுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகத் தலா **ரூபா 3,000.00** ஐ அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை பெறுகைக் கிளையில் சமர்ப்பித்து கேள்விப் பத்திரத்தை / பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

06.பெறுகை ஆவணங்கள் **20.08.2025** அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் சமூகமளித்துள்ள விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07.பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் **14.08.2025** ஆம் திகதி ஆவணி மாதம் 2025 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08.மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்: rdhsjaffna 15@gmail .com**

(சி-3587)

## வேலை நிறுத்தத்திற்கு தயாராகும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

மருத்துவர்களின் இடமாற்றங்களை அமுல்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு முடிவு செய்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஆகஸ்ட் 11 ஆம் திகதி காலை 8 மணிக்குள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படாவிட்டால், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்கள் நாடு முழுவதும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடு வார்கள் என்று சங்கத்தின் உதவிச் செயலாளர் கலாநிதி ஹன்சமல் வீரசூரிய தெரிவித்தார்.

அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க சுகாதார அமைச்சகத்திற்கு போதுமான நேரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## கஞ்சாவுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலணி மற்றும் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் இரவு இணுவில் பகுதியில் வைத்து கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர்களிடமிருந்து 9 கிலோ 794 கிராம் எடையுடைய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவரும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104-33)


**லங்கா மஹால் (PVT) LTD**
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308
(4963)


# இராசிபலன்

07.08.2025
ஆடி 22, வியாழக்கிழமை
திரயோதசி பிற்பகல்-2.35 மணிவரை

பூராடம் பிற்பகல் 2.53 மணிவரை
சுப நேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்,திருவாதிரை.

வளவன்

**மேஷம்** ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**கடகம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பொது வாழ்வில் கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும், நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, மனை சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** குடும்ப நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், பணத்தேவைகள் திருப்தி தரும், காரிய அனுகூலமுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, சடங்கு சம்பிரதாயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகும் வாய்ப்புண்டு.

**கன்னி** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், உற்சாகமான நாள், தொலைபேசி வழியில் ஆறுதல் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**வேளை அறிந்து [illegible] அறிந்து பயணம் செய்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெல் அறுவடை விழா



(தருமபுரம்)

பலபோகங்களாக பயிர்ச் செய்கைக்கு உட்படாது காணப்பட்ட கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி வயலில் இயந்திரம் மூலம் நாற்று நடுகை செய்யப்பட்ட நெல் அறுவடை விழா பாடசாலையின் முதல்வர் அ.பங்கையற் செல்வன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த அறுவடை நிகழ்வில் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், புலிங்கதேவன் கமக்காரர் அமைப்பினர் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த வயல் நாற்று நடுகை முதல் அறுவடை வரை அனுசரணையை முரசுமோட்டை புலிங்க தேவன் கமக்காரர் அமைப்பினர் வழங்கியிருந்தனர்.(8-316)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு - ஆலாபனா இசை மன்ற மாணவர்கள், வயலின் - இ.நிரோசன், மிருதங்கம் - ம.லோகேந்திரன் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள வயலின் இசையில் வயலின் - முனைவர் திருமருகல் சே. தினேஸ்குமார், மிருதங்கம்- கே.பிரணவாகரன், கடம்- கு.ரவிசங்கர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 250 | 170 | 200 |
| தக்காளி | 120 | 160 | 150 | 130 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 300 | 300 | 200 | 300 |
| கரட் | 400 | 440 | 350 | 340 | 500 |
| பூசணி | 100 | 120 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 350 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 140 | 170 | 120 | 100 | 150 |
| பாகற்காய் | 300 | 450 | 350 | 300 | 300 |
| வெண்டைக்காய் | 100 | 100 | 150 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 250 | 350 | 200 | 250 | 350 |
| பயற்றங்காய் | 150 | 160 | 100 | 150 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 150 | 200 | 250 |
| பீற்றூட் | 150 | 140 | 250 | 120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 600 | 600 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 450 | 600 | 350 | 400 |
| போஞ்சி | 400 | 750 | 800 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 250 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 40-100 | 150 | 60 | 100 |
| தேசிக்காய் | 150 | 100 | 150 | 100-200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-200 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 650 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 350 | 250 | 600 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 110 | 200 |

# முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிமுதல் 6 மணி வரை சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் இரா. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன் "பூமாதேவி என்ற பேருயிரி" எனும் தலைப்பில் கருத்துரையை வழங்கவுள்ளார். (3)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி தெற்கு, கட்டுவன் துறட்டையிட்டி அருள்மிகு ஞான வைரவர் தேவஸ்தான வருட அலங்கார உற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இவ் அலங்கார உற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை 108 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மாலை பூங்காவனம், திருவூஞ்சல் என்பன நடைபெற்று வைரவப் பெருமானின் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளதென ஆலய சமூகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

# நல்லூரான் திருவடிக்கு... இன்று 10 ஆம் நாள் திருவிழா



## கா! நல்லைக் குமரேசனே!

ஆதியந் தம்மிலா அண்டபகி ரண்டந்திகழ்
அளவுகோ லற்றபுதிரே!
ஏதமிலைப் பேதமிலை நாதமணி வேதமென
எங்குமருள் தங்கவுறைவாய்
நீதிநெறி நின்றுலவ மேதினியில் ஆட்சிசெயும்
நின்மாட்சி யென்னசொல்வேன்
பாதிமதி சூடும்பதி யானசிவன் ஞானகுரு
பா!நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## துயர்தனை நீக்கிடுவாய்

கோடிமுறை கந்தவுனை நினைந்துருகும்
குழந்தைகளும் இளையவரும் பெரியோரும்
ஆடியிலே ஏறியவுன் கொடிகாண
ஓடிவரும் அடியவரின் மனமகிழும்
காவடிகள் பல நூறு ஆடிவரும்
காட்சிதனை காண விழி போதாது
நீடிக்கும் துயரதனை நீக்கிடுவாய்
நீமயில் வாகனனே எம்முருகா

கலாபூசணம் கே.ஆர். திருத்துவராஜா

## மனநிம்மதியை தருவான் கந்தவேள்

நல்லையம்பதி நல்லைக் குமரன்
பத்தாம் நாள், திருமஞ்சம்தனில்
முத்துக்குமரன் வள்ளி தெய்வானை உடன்
பவனிவரும் எழில் காண வாரீர்
பக்தியுடன் பாமாலை பாட
பாவ வினைகளை நீக்கி
மனநிம்மதியை தருவான் கந்தவேள்

நல்லை ஆனந்தன்

## கந்தன் மயிலோடு ஆட்டம்

ஆட்டம் போடு மயிலே ஆட்டம் போடு போடு
நல்லைக் கந்தன் வாசலிலே ஆட்டம் போடு
நீ ஆட நான் பாட பக்தரெல்லாம் ஆடி மகிழ
ஆட்டம் போடு மயிலே ஆட்டம் போடு
குமரிகள் இருவருடன் சேர்ந்து ஆட்டம் போடு
போடு ஆட்டம் போடு வேல் முருகா ஆட்டம் போடு
மால்மருகா என்றே ஆட்டம் போடு போடு
கொடுத்துண்டு வாழ வேணும் என ஆட்டம் போடு
பொய் புரட்டும் வேண்டாம் என ஆட்டம் போடு
நல்லை கந்தா மயிலோடு ஆட்டம் போடு

திருமுகன், கலாபூசணம்
நா. சிவசுப்பிரமணியம் , நீர்வேலி

# "தீப்பந்தம்" திரைப்படம் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஞ்சத் திருவிழாவை முன்னிட்டு இன்று இரவு 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனத்தில் "தீப்பந்தம்" திரைப்படம் திரையிடப்படவுள்ளது என ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் அறிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த விசேட திட்டம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அரச சேவையை நவீனத்துவ கலாசாரத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் எனவும், அதனைப் பாதுகாப்பதற்கு அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் 41 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போது, அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அடுத்த ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தில், பௌதீக வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் சிதைந்து போன அரச சேவையை நவீனமயமாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச சேவையை வலுப்படுத்தும் வகையில், 2027 ஆம் ஆண்டுக்கான அரச ஊழியர்களின் வேதன உயர்வுக்காக 11 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (நி)

# மேய்ச்சல் தரவையின்மையால் கால்நடைகள் பாதிப்பு

(கண்டாவளை)

கால் நடைகளுக்கான உரிய மேய்ச்சல் தரவையின்மையால் கால்நடைகள் அழியும் அபாய நிலை தோன்றியுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் கூடுதலான மக்களின் வாழ்வாதாரமாக கால்நடை வளர்ப்பு காணப்படுகின்றது. அத்துடன் சுமார் 35,000 தொடக்கம் 38 ஆயிரம் வரையான கால் நடைகள் உள்ளதாகக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் பால் உற்பத்தியின் மூலம் மாதாந்தம் 80 மில்லியன் ரூபாவிற்கும் அதிக வருமானம் மாவட்டத்திற்கு ஈட்டப்படுவதுடன் போசாக்கு உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இறைச்சி உற்பத்தி என்பனவற்றிலும் இந்தக் கால்நடை வளர்ப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்த நிலையில் கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக அறுவடை நிறைவடைந்து இருக்கின்ற போதும் விவசாயிகள் அறுவடை செய்த நெல் வயல்களில் எஞ்சி இருக்கின்ற வைக்கோலுக்கு தீயிட்டு எரித்து வருகின்றனர்.

இதனால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் அற்றுப் போகின்றது . எனவே விடயம் தொடர்பில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-315)

# மன்னாரில் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் கொண்டு வரப்பட்ட காற்றாலை பாகங்கள்

(மன்னார்)

மன்னாரில் மக்களின் கடுமையான எதிர்ப்பிற்கு மத்தியில், நூற்றுக்கணக்கான பொலிஸாரின் பாதுகாப்புடன் காற்றாலை மின் உற்பத்திக்கான கோபுரப் பாகங்கள் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மன்னார் நகருக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் முருங்கன் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காற்றாலை பாகங்களை, மக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போதும், பொலிஸாரின் கடும் பாதுகாப்புடன் நகருக்குள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மன்னார் தள்ளாடி சந்தியில் மக்கள், குறித்த பாகங்களை நகருக்குள் எடுத்து வரக் கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சியாக திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளிலும் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் போராட்டங்கள் தொடரப்பட்டன. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மன்னார் பஜார் பகுதியில் உள்ள பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.

இதேநிலையில், இன்று அதிகாலை மக்கள் கண்காணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோதும், பொலிஸாரின் கடும் பாதுகாப்புடன், காற்றாலை பாகங்களை ஏற்றிய வாகனங்கள் நகருக்குள் உள்நுழைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (8-285)

# அதிகரிக்கும் ஊழல் 6 மாதத்தில் 63 பேர் கைது

## சுட்டிக்காட்டிய பிரதமர்



(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில், கையூட்டல் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் கீழ் 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல வினாக்களுக்கான விடை அளிக்கும் நேரத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகளும் அடங்குவதாக தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் கைது செய்யப்பட்டவர்களில், ஊழல் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்ட 7 அரசியல்வாதிகளும் அடங்குவதாகப் பிரதமர் கூறியுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான சட்ட அமுலாக்கம் அரசியல் பழிவாங்கல் அல்ல மாறாக மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

இந்த நடவடிக்கைகள் மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# பதவி விலகினார் கௌதம் அதானி



(டில்லி)

அதானி நிறுவனத் தலைவர் கௌதம் அதானி தனது குழுமத்தின் மிகவும் முக்கிய நிறுவனமான அதானி துறை முகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் நிர்வாகப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அவரது மூத்த மகன் கரண் அதானி ஏற்கனவே துறைமுக நடவடிக்கைகளை நிர்வகித்து வருகிறார்.

இந்தப் பதவி விலகலைத் தொடர்ந்து, கௌதம் அதானி இப்போது அம்புஜா சிமென்ட்ஸ், அதானி கிரீன் எனர்ஜி, அதானி கிரீன் சொல்யூஷன்ஸ், அதானி பவர், அதானி டோட்டல் கேஸ் மற்றும் அதானி இன்ஃப்ரா (இந்தியா) உள்ளிட்ட ஏழு குழும நிறுவனங்களின் நிர்வாகமற்ற தலைவராக மாறியுள்ளார்.

விமான நிலையங்கள், தரவு மையங்கள் மற்றும் செப்பு உலோகங்கள் போன்ற புதிய வணிகங்களின் காப்பகமாக அறியப்படும் அதானி எண்டர்பிரைசஸ் என்ற ஒரே ஒரு நிறுவனத்திற்கு மாத்திரமே கௌதம் அதானி தற்போது நிர்வாகத் தலைவராக இருக்கிறார். இந்த மாற்றம் நிறுவனங்கள் சட்டத்தின் (பிரிவு 203, துணைப்பிரிவு 3) மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது ஒரு முக்கிய நிர்வாக நபர் அல்லது ஒரு முழுநேர பணிப்பாளர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களில் நிர்வாகப் பதவிகளை வகிப்பதைத் தடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)




(8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 'கிங்டம்' திரைப்படத்திற்கு எதிராக தமிழகத்தில் போராட்டம்!



(சென்னை)

நடிகர் விஜய் தேவர கொண்டா நடிப்பில் வெளியான தெலுங்குத் திரைப் படமான 'கிங்டம்', ஈழத் தமிழர்களை மிக மோசமாகச் சித்தரித்துக் காட்டுவதாகத் தெரிவித்து தமிழக அரசியல்வாதிகள் பலரும் கண்டனம் வெளியிட்டு வருகின்றனர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு குடிபெயர்ந்து சென்றவர்களை ஈழத்தமிழர்கள் அடிமைகள் போலவும் தீண்டத்தகாதவர்களாகவும் நடத்துவது போன்று இத்திரைப்படத்தில் காட்சிகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கருத்துச் சுதந்திரம் எனும் பெயரில், ஈழத் தமிழர்களின் வரலாற்றை எப்படி வேண்டுமானாலும் திரித்து, தவறாகச் சித்தரிக்கலாம் என எண்ணுவதை ஒருநாளும் அனுமதிக்க முடியாது என அரசியல்வாதிகள் கண்டித்துள்ளனர்.


ஈழத்தமிழர்கள் மலையகத் தமிழர்களை ஒடுக்கினார்கள் என அத்திரைப் படத்தில் காட்டப்படுவது வரலாற்றுத்திரிபு எனவும் மிகப்பெரும் மோசடித்தனம் எனவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வரலாற்றில் ஒருநாளும் நடந்திராத ஒன்றை நடந்ததாகக் காட்டி, ஈழச் சொந்தங்களை மிக மோசமாகச் சித்தரிக்கும் இப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது என்றும் தமிழக அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையே, 'கிங்டம்' திரைப்படம் வெளியாகிய திரையரங்குகளுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட நாம்தமிழர் கட்சியைச்சேர்ந்தவர்களைத் தமிழக பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சீனாவில் வேகமெடுக்கும் சிக்குன்குனியா
## சீனப் பயணத்தை தவிர்க்குமாறு எச்சரிக்கை



(பீஜிங்)

சீனாவில் சமீப காலமாக சிக்குன்குனியா பாதிப்பு அதிகரித்து வருகிறது. குறிப்பாக தெற்கு குவாங்டாங் மாகாணத்தின் போஷான் உள்ளிட்ட 12 நகரங்களில் இந்தத் தொற்று வேகமெடுத்துள்ளது.

இதனால் கடந்த ஒரு மாதத்தில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிக்குன்குனியா தொற்றால் பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே சீனப் பயணத்தை தவிர்க்குமாறு தனது நாட்டு மக்களுக்கு அமெரிக்கா அறிவுறுத்தி உள்ளது.

இதனையடுத்து கொரோனா தொற்றுக் காலத்தில் எடுக்கப்பட்டதுபோல விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன.

அதன்படி சிக்குன்குனியா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்த பிறகே வீட்டுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றனர்.

மேலும் காய்ச்சல், உடல் வலி போன்ற லேசான அறிகுறிகள் இருந்தாலே அருகில் உள்ள வைத்தியசாலையை அணுகிசோதனை செய்யுமாறு அறிவுறுத்தப் பட்டு உள்ளனர். (நி)

## உத்தராகாண்
## நீரில் மூழ்
## ❖ 17 பேர் உயிரி
## ❖ பலர் மாயம்
## ❖ மீட்புப் பணி

(டில்லி)

**உத்தரகாண்டில் பெரும் மேக வெடிப்பால் வெள்ளப்பெருக்கில் இது பேர் உயிரிழந்துள்ளதாக வெளியாகியுள்ளன.**

மேக வெடிப்பு என்பது ஒரு மிகக் குறுகிய நேரத்தில் மிக அதிகமான மழை பெய்யும் இயற்கை நிகழ்வாகும். இது ஒரு சிறிய பகுதியில், ஒரு மணி நேரத்திற்குள் சுமார் 100 மில்லிமீற்றர் அல்லது அதற்கும் அதிக மழை பெய்வதைக் குறிக்கும்.

அந்தவகையில் உத்தர காண்ட் மாநிலம் உத்தரகாஷி மாவட்டத்தில் ஹர்சிலுக்கு அருகிலுள்ள தாராலி பகுதியில் நேற்று திடீரென மேகவெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்த மேகவெடிப்பினைத் தொடர்ந்து அங்கு கீர் கங்கா

அ
ஏ
செ
க
ட

கு
அ
ம

## ஹிரோஷிமா அணுசக்தி
## 80 ஆண்டு நிறைவ

(டோக்கியோ)

ஹிரோஷிமா நகரின் மீது அமெரிக்கா அணுகுண்டை வீசி 80 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, ஜப்பானில் நேற்று புதன்கிழமை காலை மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்வில் ஜப்பானிய பிரதமர் ஷிகெரு இஷிபா, உலகம் முழுவதிலுமிருந்து வந்த அதிகாரிகளுடன் கலந்து கொண்டார்.

மேற்கு ஜப்பானிய நகரமான ஹிரோஷிமா 1945 ஆகஸ்ட் 6, அன்று தரைமட்டமாக்கப்பட்டது.

அப்போது அமெரிக்கா "லிட்டில் பாய்" என்ற செல்லப்பெயர் கொண்ட யுரேனியம் குண்டை வீசியது.

இந்த குண்டுவெடிப்புகளில் 200,000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். சிலர் உடனடியாகவும், ஏனையவர்கள் கதிர்வீச்சு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...டில் வெள்ளப்பெருக்கு
# ...கியது கிராமம்!

## ...ரிழப்பு
## ...
## ...ிகள் தீவிரம்



...் ஏற்பட்ட
...ல் ஏற்பட்ட
...துவரை 17
...கத் தகவல்

ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்தத் திடீர் வெள்ளப்பெருக்கில் அங்குள்ள கட்டடங்கள் அடித்துச் செல்லப்பட்டன.

மேலும் அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும், மண்ணில் பலர் புதையுண்டதாகவும் அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் குறித்த பகுதியில் மீட்புப் படையினர் மீட்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் குறித்த பெரும் மேக வெடிப்பால் ஒரு கிராமமே நீரில் மூழ்கி உள்ளதாகவும், இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பலர் மாயமாகி உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

முன்னதாக உத்தர காண்ட் மாநிலம் முழுவதும் பல இடங்களில் மிகக் கனமழை பெய்யும் என்று ஏற்கனவே இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ...தி தாக்குதல்
## ...வடைந்தது

நோய் மற்றும் தீக்காயங்களாலும் மரணித்தனர்.

இரண்டாம் உலகப் போரின் போது ஹிரோஷிமா சில இராணுவப் பிரிவுகளின் தலைமையகமாகவும், ஒரு முக்கிய விநியோகத் தளமாகவும் இருந்தது.

இந்த நிலையில், ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் குண்டுகள் வீசப்பட்டதைத் தொடர்ந்து, ஜப்பான் சரணடைந்ததன் மூலம் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது. இது பல நாட்கள் இடைவெளியில் நடந்தது.

அணுசக்தி வல்லரசான அமெரிக்கா மற்றும் அணு ஆயுதங்கள் இருப்பதை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லாத இஸ்ரேல் உட்பட 120 நாடுகள் மற்றும் பிரதேசங்களின் பிரதிநிதிகள், இந்த மைல்கல் ஆண்டிற்கான ஹிரோஷிமா அமைதி நினைவுப் பூங்காவில் நடைபெற்ற வருடாந்திர விழாவில் கலந்து கொண்டனர். (நி)



## மெக்சிக்கோ சிறையில் கலவரம்
# 7 கைதிகள் உயிரிழப்பு



(மெக்சிக்கோ)

மெக்சிகோவில் சிறையில்இரு குழுக்களிடையே ஏற்பட்ட கலவரத்தில் 7 கைதிகள் உயிரிழந்துள்ளதுடன் 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மெக்சிகோ நாட்டில் வெராக்ரூஸ் மாகாணத்தில் ஆயிரக்கணக்கான கைதிகள் அடைக்கப்பட்டுள்ள டக்ஸ்பன் சிறைச்சாலையிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

குறித்த குற்றக் கும்பலானது மற்றைய கைதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை மிரட்டிப் பணம் பறிந்து வந்ததாகக் கூறப்படும் கைதிகளுக்கிடையிலேயே குறித்த கலவரம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலவரத்தின் போது, இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கிக் கொண்டதுடன், மேலும் சில கைதிகள் சிறைச்சாலையின் உள்ளே தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலவரத்தில் 7 கைதிகள் உயிரிழந்துள்ளதுடன், 10இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கலவரம் தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

மேலும், சம்பவம் தொடர்பில் அந்த நாட்டுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## பி.எச்.டி படிக்கும் ரோபோ



(பீஜிங்)

சீனாவில் மனித உருவ "ரோபோ" ஒன்று, அந்நாட்டின் பாரம்பரிய கலையான நாட்டியம் மற்றும் நாடகத் துறையில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்கான, பி.எச்.டி கற்கை நெறியில் சேர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உலகில் வேகமாக வளர்ந்து வருகிறது.

அதிலும்ரோபோக்களை உருவாக்கி அதில், ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப்புகுத்தி, கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள், விடுதிகள் என பல்வேறு துறைகளில் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், சீனாவின் ஷாங்காய் தியேட்டர் அக்கடமியில், மனித உருவிலான ரோபோ ஒன்று, அந்த நாட்டின் பாரம்பரிய நாட்டியம் மற்றும் நாடகத் துறையில் கலாநிதி பட்டம் பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏ.ஐ, கலைஞர் என்று வர்ணிக்கப்படும் "எக்ஸ்யூபா -01 " என்ற அந்த ரோபோ, அழகான ஆணின் தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற ஷாங்காய் கலைஞரான பேராசிரியர் யாங் கிங்கிங்கின் வழிகாட்டுதலின் கீழ், செப்ரெம்பர் 14 இல் இந்த ரோபோ தன் கல்விப் பயணத்தை ஆரம்பிக்கிறது.

மேடை நிகழ்ச்சி, திரைக்கதை எழுதுதல், மொழி உருவாக்கம் உட்பட பல்வேறு பாடத்திட்டங்களை இந்த ரோபோ கற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்ட் மாத இராசி பலன்கள்

## பணவரவு திருப்தி தரும்!



**கும்பம்: கிரகநிலை** - இராசியில் சனி (வ), ராகு - பஞ்சம ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன் - களத்திர ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

கிரகமாற்றம்: 03.08.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து புதன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.08.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சூரியன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.08.2025 அன்று சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25.08.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து புதன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் கவலைகள் அகலும். எவ்வளவு திறமையுடன் செயற்பட்டாலும் காரியத் தடங்கல்கள் வரலாம். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். புதிய ஓடர்கள் தொடர்பாக அலையும்படி இருந்தாலும் சாதகமாக முடியும். பணவரத்து திருப்தி தரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழு மூச்சுடன் செயற்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். பயணங்களின் போது உடைமைகளை கவனமாகப் பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கான திட்டங்களைச் செயற்படுத்துவீர்கள்.

புதிதாக வீடு - மனை வாங்குவதற்கான வேலைகளைத் தொடங்குவீர்கள். பெண்கள் பொறுப்புகளை ஏற்பதை தவிர்ப்பது




நல்லது. அரசியல்வாதிகளுக்கு தொண்டர்களால் ஆதாயம் ஏற்படும். கலைத்துறையினருக்குப் பணவரத்து இருக்கும். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் முழு மூச்சுடன் ஈடுபடுவீர்கள்.

**அவிட்டம் 3,4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் உங்களின் வேலைத் திறனைக் கூட்டிக்கொள்ள புதிய அலுவலகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரிகள் போட்டிகளையும், பொறாமைகளையும் சந்தித்தாலும் பொறுமையுடன் செயற்பட்டு அவற்றைச் சமாளிப்பீர்கள்.

**சதயம்:** இந்த மாதம் உங்களின் சமயோஜித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு நன்றாக இருக்கும். வியாபாரிகளுக்கு பொருட்களின் விற்பனை மிகவும் நன்றாகவே இருக்கும்.

**பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருப்பதால் சொந்தங்களுக்காகச் செலவு செய்வீர்கள். சக ஊழியர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

**பரிகாரம்:** விநாயகப் பெருமானைத் தேங்காய் தீபம் ஏற்றி வழிபடுவது காரியத் தடைகளை போக்கும். நன்மை கிடைக்கும்.

சந்திராஷ்டம தினங்கள்:
ஆகஸ்ட் 26, 27

அதிஷ்ட தினங்கள்:
ஆகஸ்ட் 8, 9

## வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்!



**மீனம்: கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் சுக்கிரன் - சுக ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - சப்தம களத்திர ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி (வ), ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து புதன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.08.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சூரியன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.08.2025 அன்று சுக்கிரன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25.08.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து புதன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் உடல் உபாதைகள் அகலும். எல்லாவற்றிலும் இருந்து வந்த மன கவலையை நீக்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல் நிலையில் கவனம் அவசியம். திட்டமிட்டபடி காரியங்களைச் செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். எனவே எந்த ஒரு வேலையை செய்வதாய் இருந்தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்க செய்யும். பணவரத்து இருக்கும். பாக்கிகள் வசூலாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் தாமதமாகக் கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

பெண்களுக்கு திடீர் செலவு உண்டாகலாம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு உயரும். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்கள் மிகவும் கவனமாக




பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம்:** இந்த மாதம் வர வேண்டிய பண பாக்கிகள் வசூலாகும். பண விடயங்கள் தாராளமயமாக இருக்கும். இருந்தபோதும் அவ்வப்போது சிற்சில வேளைகளில் கையைப் பிசைந்து கொண்டு இருப்பீர்கள்.

**உத்திரட்டாதி:** இந்த மாதம் நீங்கள் படும் கஷ்டம் வெளியே தெரியாது. நீங்கள் எப்போதுமே பிறர் கண்ணுக்கு சவுகரியமான வாழ்க்கை வாழும் ஆளாகக் காட்சி தருவீர்கள். நீங்கள் யாரிடமும் உங்களது குறைகளைத் தெரிவித்துக் கொள்ள மாட்டீர்கள்.

**ரேவதி:** இந்த மாதம் புதிய வாகனம் யோகம் வந்துசேரும். உங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் தலையிடுவதும் கருத்து சொல்வதையும் தவிர்த்தல் நலம். முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

**பரிகாரம்:** நவக் கிரகத்தில் குருவுக்கு நெய்தீபம் ஏற்றி வழிபட செல்வம் சேரும். கல்வியில் வெற்றி கிடைக்கும்.

சந்திராஷ்டம தினங்கள்: ஆகஸ்ட் 01, 02, 28, 29

அதிஷ்ட தினங்கள்: ஆகஸ்ட் 10, 11, 12

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில்

# இளையோர்களினால் முன்னெடுக்கப்பட்ட 'கருநிலம் பாதுகாப்பு' மண் மீட்பு போராட்டம்!




(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிய மணல் சுரண்டல்களினால் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் பூர்வீக நிலங்கள் அழிவடையும் அபாயம் காணப்படுகின்ற நிலையில் குறித்த நடவடிக்கைகளைக்கண்டித்து, மன்னார் மாவட்ட இளையோர் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வுப் போராட்டம் நேற்று புதன்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது கலந்து கொண்ட இளையோர் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த பேரணி மன்னார் நகர சுற்றுவட்டப் பகுதியில் ஆரம்பமாகி மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வீதியைச் சென்றடைந்தது.

அங்கிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மன்னார் நகரச் சுற்றுவட்டப் பகுதியைச் சென்றடைந்து, அதனைத் தொடர்ந்து கனிய மணல் அகழ்வுக்கு எதிராக ஜனாதிபதிக்கு அனுப்பும் வகையில் தபாலட்டையில் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தின் ஒரு அங்கமாக விழிப்புணர்வு நாடகம், கையெழுத்துப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் இன்று வியாழக்கிழமையும் இடம் பெற்று இறுதியில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் விழிப்புணர்வு நடைபயணம்




(தருமபுரம்)

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நடைபயணம் நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அந்த வகையில் நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்டத்திலும் விழிப்புணர்வு நடைபயணம் முன்னெடுக்கப்பட்டது.

இச் செயற்றிட்டத்திற்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சம்மேளனத்தால் போதை அற்ற உலகம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து கிளிநொச்சி கனகபுரம் பொது மைதானம் வரை மாவட்ட இளைஞர் உத்தியோகத்தர் தலைமையில் காலை 9 மணி அளவில் நடைபயணம் மேற்கொண்டு 11 மணியளவில் நிறைவு பெற்றது

இதன் போது இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பல பதாகைகள் ஏந்தி வீதி வழியாக நடந்தும் துவிச்சக்கர வண்டிகள் மூலமாகவும் தமது பேரணியை மேற்கொண்டனர்

இப் பேரணியில் மாவட்ட இளைஞர்கள் மற்று பிரதேச இளைஞர் உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளை மற்றும் பல சமூக செயற்பாட்டாளர் ஆகியோர் பங்கு கொண்டனர். (8-316)

# தருமபுரத்தில் கசிப்பு உற்பத்தி; மூன்று சந்தேக நபர்கள் கைது!

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கடந்த 4 ஆம் திகதி சூட்சுமமான முறையில் கசிப்பை பயணப் பொதியில் மறைத்து பேருந்தில் எடுத்துச் செல்ல முற்பட்ட சந்தேக நபர்கள் இருவர் புளியம்பொக்கணைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

குறிந்த நபர்களிடம் இருந்து 30 லீற்றர் கசிப்பும் பறிமுதல் செய்யப்பட்டது.

அத்துடன் அன்றைய தினம் தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக பெரியகுளம் கட்டைக்காட்டு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் 50 லீற்றர் கசிப்பு, 60 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவற்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம் திசாநாயக்க தெரிவித்துள்ளார். (8-316)

# அலங்காரா நல்லூரா இன்று மஞ்சம் தரிசிப்போம். நாமும் நாடும் அமைதி, அருள் நலம் பெற்று உய்வோம்

**ஊனமாம் உடலம்பொய்யென் றுணர்ந்து மெய்யறிவைக் கண்டு**
**தானவனான போதே சற்குரு பதத்தைச் சேர்ந்தாய்;**
**வானதி லிரவி திங்கள் வந்துபோவதனைக் கண்டால்**
**ஞானவான் நாகை நாதர் நடனமுங் காண்பாய் நெஞ்சே!**

**சித்தர்கள் பாடல்கள் புரட்சிகரமானது "ஊனமாம் உடல் பொய்யென்று உணர்ந்து" நாம் ஆலயத்தில் ஆசார சீலராகவும், சிவச்சின்னம் அணிந்து வரவேணும்,** நம் முன்னோர் சீர்உடைகள் அணிந்தும், நமது **அநாகரிக** அலங்காரங்களைத் தவிர்த்து இறைவன் **"அலங்காரா"** தரிசனம் செய்து, **"நாதன் நடனமுங் காண்பாய் நெஞ்சே!" "அலங்காரா நல்லூரா!"**

கந்தன் அலங்காரம் என்பது கந்தனுக்குரிய அலங்காரம் என்பது பொருள். இந்தப் பரந்த உலகத்தில் **நமக்குப் பற்றுக்கோடாக இருப்பவன் இறைவன்.** ஒரு மனிதரைச் சார்ந்து வாழ்வதும் ஒருபற்றுத்தான், ஆனால் இறைவனைப் பற்றிக் கொள்ளும் பற்று வேறு, அப்படியான அடியார்களுக்கு **பிறப்பு- இறப்பு விடுதலை கிடைக்கிறது.** உலகப்பற்று அலை அலையாக நம்மைத் தாக்கித் தாக்கி கொண்டே இருக்கிறது.

**பற்றுக பற்றற்றர் பற்றினை அப்பற்றை**
**பற்றுக பற்று விடற்கு - திருவள்ளுவர்**

**அலங்காரா நல்லூரா**

கண்ணுக்கு இன்பம் அளிக்க ஆண்டவனது திருவுருவங்களுக்கு அலங்காரம் செய்வதும், திருவிழாக் காலத்தில் முக்கியத்துவம் நல்லூர் அலங்காரா! இறைவனுக்கு அலங்காரம், எம் பெருமான் வைக்கப்பட்டிருக்கும் பீடம், மஞ்சம், சப்பரம், தேர், தேர் ஓடும் திருவீதி, வீதியின் சுற்றாடல் எங்கும் கந்தன் அலங்காரம். இவ்வளவு அலங்காரத்தினாலும் **மனிதனின் மனம் கவரப் பெற்று, பின் நடு நாயகமாக அலங்காரா! நல்லூரா அழைக்கவும் கவிகிறது, அத்துடன் மனமும் கந்தனின் அருள் பெற்று இன்புறுகிறது, உய்கிறது.**

நாம் நம்மை அலங்காரம் செய்து நாம் மகிழ அன்று, பிறர் கண்களுக்கு என்பதனை தாயுமானவர் சுவாமிகள்

**உன்னைச் சிங்காரித்து உன் அழகைப் பாராமல்**
**என்னைச் சிங்காரித்து இருந்தேன் பராபரமே**

நாம் இந்தப் பாழும் உடம்பைச் சிங்காரித்து வாழ்வை வீணாக்கினேன் என்கிறார். அன்புடைய பக்த அடியார்கள் இறைவனைச் சிங்காரித்து "அலங்காரா" எனவும் அழைத்தும், இறைவன் மீது மனம் பதிய ஆசார சீலராகவும் ஆலயத்துக்கு வந்து வழிபடுவதுடன் மாணிக்க வாசகர் சுவாமியை திருவாசகத்தில்

"விண்ணுக்கு ஒரு மருந்தை கண்ணுக்கு இனியாணை
பாடிக் கசிந்து உள்ளம் உருக"

நல்லூர்ப்பதியிலும் திருப்புகழ், கந்தர் அலங்காரம் திருவாசகம் ஓதி இறைவன் **அலங்காரக் கந்தன் மீது மனம் பதியவும்,** பிற பொருட்கள் பதிவுகள் நீங்கவும் இறைவனாகிய பற்றுக் கொண்டவர்களுக்கு பிறப்பு, இறப்பு ஆகிய இருதுன்பமும் நீங்கி விடுதலை கிடைக்கிறது.

**நம் மனம் அலங்காரக் கந்தன் மீது மனம் பதியவும்** கவிய வேண்டும் என்பதற்காக **அருணகிருநாதர் பெருமான்** தம்மிடம் உள்ள சிறந்த மலர் போன்ற தமிழ் சொற்களால் தனது மனதில் இருக்கும் இறைவனைப் பிறரும் இறைவன் மீது பற்றிக் கொண்டு அருள் இன்பம் அடையவும் "வாடாத பாமலர் மாலை" அருள் மிகு சொற்களால் கந்தர்க்கு அலங்காரா! எனும் கந்தர் அலங்காரம் பாடியதை நாம் எல்லோரும் பாடுவோம் **பிறவிப் பிணித்துன்பம் நீக்குவோம் 'அலங்காரா நல்லூரா'.**


**உலகத்தவரே! உள்ளத்தை அதன் போக்கில் விடாமல் கட்டுப்படுத்தி ஆலயத்தில் அன்பே சிவம் என்பதனை உணர்ந்து மெய் பொருள் ஆகிய மஞ்சத்தில் அலங்கார முத்தி தரும் முத்துக் குமரன் திருவடியை சிந்தித்தபடி கந்தர் அநுபூதி! கந்தர் அலங்காரம் ஓதியும், திருப்புகழ் திருமுறையும் ஓதிப் பணிவோம். முருகன் திருவருள் தானாகவே கிட்டும் நல்லூரா அலங்காரா!**

**அலங்காரா! நல்லூரா**

**அன்பன் க.கு.க சிவபாலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்போது பக்கத்துக் காட்டிலிருந்து ஏதோ கூச்சலும் அலறும் குரலும் கேட்டன. பலர் விரைந்து நடந்து வரும் சத்தமும் கேட்டது. சேந்தன் அமுதன் சாலை ஓரத்து மரம் ஒன்றின் பின்னால் மறைந்து கொண்டான். கையில் வேல் பிடித்த வீரர்கள் ஏழெட்டுப் பேர் காட்டு வழியாகத் திடுதிடுவென்று நடந்து வந்து இராஜபாட்டையில் பிரவேசித்தார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு பெண் பிள்ளை இருப்பது போலத் தோன்றியது.

மனிதர்களிடையில் சற்று இடைவெளி தெரிந்த போது மத்தியில் இருந்தவள் பூங்குழலியின் அத்தை மாதிரி தோன்றினாள். அவள் அத்தையாக இருக்க முடியாது, அது தன்னுடைய மனப்பிரமை என்று சேந்தன் அமுதன் எண்ணிக் கொண்டான்.

அந்த வீரர் கூட்டம் சென்ற பிறகும் காட்டிற்குள்ளேயிருந்து ஒரு பெண் பிள்ளையின் கூக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது. சேந்தன் அமுதன் முதலில் 'நமக்கு என்னத் திற்கு வம்பு? நம் வழியே நாம் போய் விடலாமா?' என்று நினைத்தான். ஆனாலும் மனது கேட்கவில்லை. யார் அலறுவது என்று பார்த்து, தன்னால் ஏதேனும் உதவி செய்யக் கூடுமானால் செய்யலாம் என்று எண்ணிக் கூக்குரல் வந்த திசையை நோக்கிப் போனான்.

அங்கே ராக்கம்மாள் மரத்தில் கட்டப்பட்டிருந்ததைக் கண்டான். அவள் தலையிலிருந்து இரத்தம் வழிந்து முகமெல்லாம் ஒரே கோரமாயிருந்தது. அமுதனுக்கு அருகில் நெருங்கவே பயமாயிருந்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு சென்று கட்டுக்களை அவிழ்த்து விட்டான்.

அவிழ்க்கும் போதே 'இந்த அக்கிரமம் யார் செய்தது? எதற்காகச் செய்தார்கள்? சற்று முன் சாலையில் வந்து ஏறின மனிதர் யார்? அவர்கள் மத்தியில் ஒரு பெண் பிள்ளையும் போனது போலிருந்ததே! அவள் யார்?' என்றெல்லாம் கேட்டான்.


'ஆம், தம்பி, அவர்கள் உன் பெரியம்மாவைக் கட்டி இழுத்துக் கொண்டு போகிறார்கள். அதைத் தடுப்பதற்கு நான் முயன்றேன். அதற்காகத்தான் என்னை இப்படி அடித்துக் கட்டி விட்டுப் போனார்கள். உன் மாமன் மகளும், பெரியம்மாவும் படகிலேறிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

படகிலிருந்து தான் பெரியம்மாவைக் கட்டி இழுத்து வந்தார்கள். பூங்குழலியின் கதி என்ன ஆயிற்றோ தெரியவில்லை ஓடிப்போய்ப் பார்!' என்றாள். சேந்தன் அமுதன் திடுக்கிட்டுப் பூங்குழலியைத் தேடிக் கொண்டு புறப்பட்டான். அச்சமயம் ராக்கம்மாள், 'கொஞ்சம் பொறு தம்பி! பூங்குழலியும் அந்த ஊமைப்பிசாசும் படகில் ஏறி எங்கே புறப்பட்டார்கள்? உனக்கு தெரியுமா? உன்னை ஏன் விட்டு விட்டுப் போனார்கள்? நீ எங்கே தனியாகக் கிளம்பினாய்?' என்று கேட்டாள். இப்படி அவள் கேட்டது, முக்கியமாக 'ஊமைப் பிசாசு' என்று சொன்னது சேந்தன் அமுதனுக்குப் பிடிக்கவில்லை. 'எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன்' என்று கூறி விட்டு, கால்வாயை நோக்கி ஓடிவந்தான். பூங்குழலியையும் அந்த மனிதர்கள் அடித்துப் போட்டிருப்பார்களோ, ஒருவேளை கொன்றே இருப்பார்களோ என்ற பதை பதைப்புடனே வந்தான். பூங்குழலி உயிரோடிருப்பதையும் இரத்தக் காயமில்லாமலிருப்பதையும் பார்த்ததும் அவனுக்கு ஆறுதல் உண்டாயிற்று.

(தொடரும்...)




## புலிக்குப் புலி



புலியார் அன்று மகா கோபமாக இருந்தார். காலையில் அவர் கேட்ட செய்தி அவரை அவ்வளவு கோபப்பட வைத்து விட்டது. அதற்கு காரணம் நரியார் சொன்ன செய்தி தான். விடிந்த பின் எழுந்த சூரியன் அப்பொழுது தான் மேலேறிக் கொண்டிருந்த தான். புலியார் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கண்ணை மூடி குட்டித் தூக்கம் போட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது மெதுவான காலடி ஓசை கேட்டது. என்னதான் தூக்கக் கலக்கத்தில் இருந்தாலும் புலியாரின் காதுகள் விருக்கென் வந்த்து காலடி சத்தத்தை உன்னிப்பாக கேட்டது. நடை பதுங்கி பதுங்கி நடப்பது போல காதுக்கு பட்டது. பட்டென கண்ணை விழித்து சற்று தொலைவில் நரி யார் பதுங்கி பதுங்கி நடந்து கொண்டிருப்பதை பார்த்தது.

என்ன நரியாரே சத்தமில்லாமல் போகின்றீர்? இங்கே வாரும். ஒரே கேள்வி தான், நரியார் சப்த நாடியும் ஒடுங்கி, மெல்ல புலியார் அருகில் வந்தது. ஐயா ஒண்ணுமில்லை. என்று மென்று முழுங்கியது.

எங்கே போகின்றீர்? என்று கேட்டது புலி. நம்ம காட்டுக்கு புதிதாக புலியார் ஒருத்தர் வந்திருக்கார். அவர் ஏதோ என்னை பாக்கணும் என்று வர சொல்லியிருக்கார். அது தான் போய் பார்த்துவிட்டு வந்துடலாம் என்று போய்க் கொண்டிருக்கேன்.

நல்ல தூக்கக் கலக்கத்தில் இருந்த புலியாருக்கு வந்த கோபத்தில், அதனுடைய தூக்க கலக்கம் எல்லாம் காணாமல் போய் விட்டது.

இந்தக் காட்டுக்கு புதுசா புலி ஒண்ணு வந்திருக்கா? அது வந்து உன்னை வர சொன்னா நீ போயிடுவியா? என ஒரு உறுமி உறுமி விட்டு, கேட்டது.

ஐயோ, அப்படி எல்லாம் ஒன்றுமில்லை, போகவில்லை என்றாலும் கஷ்டம் தான், அது என்னை சும்மா விடாது.

நீ இப்ப திரும்பி போ, அது உன்னை வந்து கேட்டா நான் தான் போக வேண்டாம் என்று சொல்லி விட்டேன்என்று சொல் என்ன புரிஞ்சுதா? சரி, நான் இப்பவே கிளம்புறேன் என சொல்லிவிட்டு சட்டென ஓடி மறைந்து விட்டது.

அப்பொழுது ஆரம்பித்த கோபம், அன்று முழுவதும் யார் அந்த புதிய புலி? யோசித்து, யோசித்து மண்டையை உடைத்துக் கொண்டதுதான் மிச்சம். ஒரு வேளை இந்த நரியார் நம்மை ஏமாற்றை இப்படி பொய் சொல்லுகிறதோ?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல உன்னைப் போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலி களை மட்டுமே. *- அப்துல் கலாம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாடசாலை நிர்வாகத்தில் வெளியாரின் தலையீடு

கல்விச் சீர்திருத்தம் என்ற விடயம் பரந்த நோக்கில் ஆழ்ந்து சிந்தித்து செயற்படுத்தப்பட வேண்டும்.

பொதுவில் கல்விச் சீர்திருத்த நடவடிக்கை களின்போது அனுபவமிக்க அதிபர், ஆசிரியர் கள், கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பாடசாலைக் கல்விச் சமூகத்தினரின் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும்.

உண்மையில் பாடசாலை முகாமைத்துவத் துக்கும் கற்பித்தலுக்கும் பொறுப்பாக இருந்த வர்களை – இருக்கின்றவர்களை விலத்தி விட்டு, உயர் பதவிகளில் இருந்தவர்களிடம் இருந்து கல்விச் சீர்திருத்தத்துக்கான ஆலோ சனைகளைப் பெறும்போது, அவர்களின் மேதாவித்தனம் மீண்டுமொரு கல்விச்சீர்திருத் தத்துக்கு வித்திடுகிறது.

எனவே பாடசாலை நிர்வாகத்துடன் நேரடி யாகச் சம்பந்தப்பட்ட அனுபவமுள்ளவர்களின் யதார்த்தபூர்வமான கருத்துக்களுக்கு முன்னு ரிமை அளிக்கும் போதுதான் கல்விச் சீர்திருத் தத்தினூடு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும்.

எது எவ்வாறாயினும் பாடசாலை நிர்வாகத் தில் வெளியாரின் தலையீடு கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும். அதிபர், ஆசிரியர்கள் துணிவோடு தீர்மானங்களை எடுத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புக்கூறு வதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண் டும்.

தேவையாயின் வலயக்கல்விப் பணிமனை யின் மேற்பார்வைகள், கணக்காய்வுகள் தேவைக்கேற்ப அதிகரிக்கப்படலாம்.

சமகாலக் கல்வித் திட்டம் நற்பிரஜைகளை உருவாக்குவதில் அடைந்த தோல்விக்கு பாட சாலை நிர்வாகத்தில் வெளியாரின் அதீத தலையீடும் காரணம் என்பதை மறுத்து விட முடியாது.

ஆம், சமூகத்தில் கௌரவத் தேவையுடன் வெளிப்படுபவர்கள் தங்களைப் பிரபலப்படுத்து வதற்காக தலையிடுகின்ற இரண்டு இடங்க ளில் ஒன்று ஆலயம். மற்றையது பாடசாலை.

ஆலயங்களில் மேற்குறித்தவர்களின் தலையீடும் உள்நுழைவும் எதிர்ப்பிரசாரமும் சேர்ந்து சம்பந்தப்பட்ட ஆலயங்களை நீதி மன்றில் நிறுத்தியுள்ளன.

இதற்கும் மேலாக, மேற்குறிப்பிட்ட தரப்பி னர் பாடசாலைகளில் மூக்கை நுழைப்பதனால் அதிபர், ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

உண்மை. வேறு எந்த அரச பணியிலும் இல்லாத அளவில் பாடசாலை நிர்வாகத்தில் வெளியாரின் தலையீடும் அவர்களின் ஊடுரு வலும் மிகப்பெரும் குழப்பங்களை ஏற்படுத்து கின்றன.

அதிலும் இரு தரப்பாகப் பிரிந்து நிற்கின்ற வர்கள் பாடசாலைக்குள் நுழைந்துவிட்டால் அதிபர், ஆசிரியர்களின் பாடு அம்போ என்றாகி விடும்.

ஆகவே புதிய கல்விச்சீர்திருத்தம் வெற்றிய டைய வேண்டுமாயின், பாடசாலை நிர்வாகத் தில் பெற்றோர் – பழைய மாணவர் உள்ளிட்ட வெளியாரின் தலையீடுகள் கடுமையாகக் குறைக்கப்பட வேண்டும்.

# செம்மணி விவகாரத்தில் நீதி கிட்ட

# சர்வதேசம் ஒன்றிணைய வேண்டும்

## பிரிட்டன் எம்.பி உமாகுமரன்

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச மனித உரிமை கள் சட்டம் மற்றும் தர நிலைகளுக்கு இணங்க விசாரணை நடைபெறு வதை உறுதி செய்ய சர்வ தேச சமூகம் ஒன்றுபட வேண்டும் எனப் பிரித் தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமா கும ரன் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

செம்மணி மனிதப் புதைகுழி ஓர் இனத்தின் பெரும்பேரழிவுக்கான சான்று அகழப்படும் ஒவ் வொரு என்புத்தொகுதிக் குப் பின்னாலும் துயரத் தில் சிக்குண்ட உண்மை மற்றும் நீதியை தேடும் ஒரு குடும்பம் உள்ளது. எனவே சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற் றும் தரநிலைகளுக்கு இணங்க விசாரணை நடைபெறுவதை உறுதி செய்ய சர்வதேச சமூகம் ஒன்றுபட வேண்டும்.

பிரிட்டன் மனிதப் புதைகுழிதொடர்பான விசாரணைக்கு தொழில் நுட்ப உதவியை வழங் குமா? எனப் பாராளுமன் றில் கேள்வியெழுப்பி யுள்ளேன். இந்த விடயம் குறித்து சமீபத்தில் பிரிட் டனின் வெளியுறவுச் செயலாளருக்கும் நான் கடிதம் எழுதியுள்ளேன்.

செம்மணி விவகாரத் தில் சர்வதேச நட்பு நாடு களுடன் இணைந்து இங் கிலாந்து நமது பங்கை முழுமையாக ஆற்ற வேண்டும் என்றார்.(ம-7)

# யாழில் மலேரியாவுடன் இருவர் அடையாளம்

## யாழ்.போதனா பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா

யாழ்ப்பாணத்தில் மலேரியா தொற்றுடன் இருவர் அடையாளம் காணப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என யாழ்.போதனா வைத் தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரி வித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனு ப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட் டுள்ளதாவது,

யாழ்.போதனா வைத் தியசாலையில் தற்போது இருவர் மலேரியா நோயி னால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின் றனர்.

இவர்களில் 38 வயது டைய நெடுந்தீவைச் சேர்ந்த நபர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும் 29 வயதுடைய நபர் மருத் துவ விடுதியிலும் சிகி ச்சை பெற்று வருகின்ற னர்.

இவர்கள் ஐரோப்பா விற்குச் செல்வதற்காக மேற்காபிரிக்க Guniea வளைகுடாவில் TOGO என்ற நாட்டில் இருந்து இலங்கைக்கு கட்டு நாயக்க விமான நிலை யம் மூலம் மீண்டவர்கள்.

கடந்த காலங்களில் யாழ்.குடாநாட்டில் மலே ரியா நோய் தீவிரமான போது அல்லைப்பிட்டி யில் பிளாஸ்மோடியம் பல் சிபோறம் மலேரியாவின் தாக்கம் அதிகமாக இருந்தது.

அவ்வாறே குடத் தனை, பளை ஆகிய பிர தேசங்களிலும் இவ் வகை மலேரியா நோய்த் தாக்கம் அதிகமாக இருந் தது.

எனவே தற்போதைய விரைவு உலக பயணத் தில் அடிப்படை விழிப்பு ணர்வை மலேரியா நோய் தொடர்பாக ஏற்படாத விடத்து மலேரியா மீண் டும் எமக்கு சமூக பொரு ளாதாரச் சுமையாக மாறி விடும். எனவே மலேரியா அபாயம் உள்ள இடங்க ளிற்குச் சென்று மீள்பவர் களுக்கு கிரமமான முறையில் குருதிப்பரி சோதனை தடுப்பு மருந் துகள் மூலமான சிகிச் சையும் மிகவும் அவசிய மானதாகும். வெறுமனே காகித அறிக்கைகளால் மட்டும் மலேரியா நோயி னைக் கட்டுப்படுத்த முடியாது. இது தொடர் பாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விசேட செயற்திட்டங்களை வரு முன் காப்போம் என்ற அடிப்படையில் முன்னெ டுத்தல் அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## உள்ளூராட்சிகளைக் கட்டுப்படுத்தும் வர்த்தமானியை மீளப் பெறுவீர்களா?

### சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன் றங்களை நகர அபிவி ருத்தி சபைகளாக வர்த்த மானியில் வெளிப்படுத் தப்பட்டதால் பிரதேச சபையின் அதிகாரங் களை மத்திய அரசின் கீழுள்ள நகர அபிவிரு த்தி அதிகாரசபை கட் டுப்படுத்தும் நிலை ஏற் பட்டுள்ளது.

ஆகையால் உள்ளூ ராட்சி மன்றங்களை நகர அபிவிருத்தி சபைக ளாகப் பிரகடனப்படுத் திய வர்த்தமானியை மீளப் பெறுவீர்களா? என்று தமிழரசுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறீத ரன் கேள்வியெழுப்பியுள் ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற கேள்வி மீதான விவாதங்களின் போது நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கரு ணாதிலகவிடமே அவர் மேற்கண்டவாறு வின வினார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கை யில்,

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச சபைகளின் எல்லை களும் நகர அபிவிருத் திப் பிரதேசமாக பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது.

தையிட்டி விகாரை உள்ளிட்ட பல பிரச்சி னைகள் எழுந்ததற்குக் காரணம் உள்ளூராட்சி மன்றங்களை நகர அபி விருத்தி சபைகளாக வெளிப்படுத்தப்பட்டது தான் என்றார். (ம-7)

## மின்சாரத் திருத்தச் சட்டம் சபையில் நிறைவேற்றம்

இலங்கை மின்சார (திருத்தச்) சட்டமூலம் 96 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றில் நிறை வேற்றப்பட்டுள்ளது. சட்டமூலத்துக்கு ஆதர வாக 121 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப் பீடு தொடர்பான விவா தம் இடம்பெற்றது.

சட்டமூலம் மீதான விவாதம் காலை முதல் மாலை 5.30 மணி வரை இடம்பெற்று முடிந்த நிலையில் சட்டமூலத்தை அனுமதித்துக்கொள்ள வாக்கெடுப்பு நடத்தப்பட் டது.

அதன் பிரகாரம் சட்ட மூலத்திற்கு ஆதரவாக அரசு தரப்பு வாக்களித்த நிலையில் எதிராக ஐக் கிய மக்கள் சக்தி மட்டும் வாக்களித்தது. (ம-7)

## யாழ்.ப.நோ. கூ.சங்க பொதுச்சபை கூட்டத்தை ஒத்திவைக்குக

யாழ்ப்பாண பல நோக் குக் கூட்டுறவுச் சங்க பொதுச்சபை கூட்டம் எதிர் வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறுமென அறிவிக்கப் பட்ட நிலையில்,

அன்றைய தினம் தரம் ஐந்து புலமைப் பரி சில் பரீட்சை இடம்பெறு வதாலும் நல்லூர் மகோற் சவ காலம் என்பதாலும் பொதுச் சபைக் கூட்டத் திற்கு அனைத்து உறுப் பினர்களும் பிரசன்ன மாக முடியாத நிலைமை இருப்பதால்,

பொதுச் சபைக் கூட் டத்தை ஒத்திவைக்கு மாறு பொதுச்சபை உறுப் பினர்களில் ஒரு தரப்பி னர் கோரிக்கை விடுத் துள்ளதாகத் தெரியவந் துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 30

சொக்கன்

ஒருவேளை நாளைக்கு முனீர்நல்லபிள்ளை வேடம் போட்டுக்கொண்டால் அவரை மிரட்டி வழிக்குக் கொண்டுவருவதற்காகத்தான் இந்த ஏற்பாடும்.

ஆனால் மொசாட் நினைத்தது போல் முனீர் ரெட்ஃப்பாவின் மனத்தில் பெரிய குழப்பம், சலனம் எதுவும் இல்லை அவருக்கு. ஈராக் இராணுவத்தின் மீது உண்மையான கோபம் இருந்தது. ஆத்மசுத்தியுடன் விமானக் கடத்தலுக்குத் தயாராவிட்டார்.

பொதுவாக மிக்21 விமானங்களில் முழு டேங்க் எரிபொருள் நிரப்பமாட்டர்கள். அன்றைய திகதிக்கு எத்தனை தூரம் பறக்க வேண்டும் ,அதற்கு எவ்வளவு எரிபொருள் செலவாகும் என்று கவனமாகக் கணக்குப் போட்டு அதற்குமேல் போனால் போகிறது என்று அரை சொட்டோ ஒரு சொட்டோ அனுமதிப்பார்கள் அவ்வளவு தான்.

இதுவும் ஒரு பாதுகாப்பு ஏற்பாடுதான். யாராவது ஒரு விமானி மிக்21ஐக் கடத்திக் கொண்டு வெளிநாட்டுக்குத் தப்பிக்க முயற்சி செய்தால் பாதியில் எரிபொருள் தீர்ந்துவிடும் அப்படியே தொப்பென்று கீழே விழுந்து சிதறவேண்டியதுதான்.

முனீர் ரெட்ஃப்பாவுக்கு இந்த விபரம் நன்றாகத் தெரியும். இதைச் சமாளிப்பதற்கும் அவர் ஒரு திட்டம் யோசித்துவைத்திருந்தார்.

மிக்21 விமானங்களுக்கு எரிபொருள் நிரம்புகிறவர்கள் எல்லோரும் ஈராக் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தான். அவர்களுக்கு முனீர் ரெட்ஃப்பாமீது நல்ல மரியாதை இருந்தது.

*1966 ஆம் வருடம் ஓகஸ்ட் 16 ஆம்* திகதி காலை அவர்களை நேரில் சந்தித்துப்பேசினார். முனீர் ரெட்ஃப்பா இன்னிக்கு என்னோட விமானத்துக்கு ஃபுல் டேங்க் நிரப்பிடுங்க என்று கம்பீரமான குரலில் கட்டளையிட்டார்.



நியாயப்படி பார்த்தால் எதற்காக ஃபுல் டாங்க்? என்று அவர்கள் முனிரைக் கேள்வி கேட்டிருக்கவேண்டும். பெரிய அதிகாரியின் அனுமதி இல்லாமல் மிக்21இற்கு அவ்வளவு எரிபொருள் நிரப்பமுடியாது என்று மறுத்திருக்கவேண்டும்.

ஆனால் முனீர் ரெட்ஃபா மாதிரி ஒரு சீனியர் பைலாட் மீது அவர்களுக்குக் கொஞ்சம்கூடச் சந்தேகம் வரவில்லை. இன்றைக்கு ஏதோ அவசர வேலையாக ஐயா ரொம்ப தூரம் பயணம் செய்யப்போகிறார்போல என்றுஅவர்களாகநினைத்துக்கொண்டார்கள். அவர் கேட்டபடி முழு டாங்க் எரிபொருளை நிரப்பிவிட்டார்கள்.

சிலநிமிடங்களில் முனிரின் மிக்21 விமானம் புறப்பட்டது. யாருக்கும் எந்தச் சந்தேகமும் வரக்கூடாது என்பதற்காக வழக்கமான பாதையில் சிறிது நேரம் பறந்துகொண்டிருந்தார் முனீர் ரெட்ஃப்பா.

யாரும் எதிர்பார்க்காத ஒரு விநாடியில் சட்டென்று அந்த விமானத்தின் பாதை மாறியது. ஈராக் எல்லையை நோக்கி அதிவேகமாகப் பறக்கத் தொடங்கியது.

அவ்வளவுதான் இனிமேல் நான் திரும்புவதற்கு வழியே இல்லை. பெருமூச்சுடன் நினைத்துக்கொண்டார் முனீர் ரெட்ஃப்பா. ஈராக்கைப் பொறுத்தவரை நான் ஒரு தேசத்துரேகியாகிவிட்டேன். எந்த நிமிடத்திலும் அவர்கள் என்னைத் தாக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

அவர் நினைத்தது போல் கீழே விமானக் கட்டுப்பாட்டு அறையில் இருந்த ஈராக் அதிகாரிகள் அலறத் தொடங்கியிருந்தார்கள். இந்தப் பைலட்டுக்கு என்ன ஆச்சு? கேனத்தனமா எங்கேயோ பறக்கிறான்? அவனை ரேடியோ விலே பிடிங்க.

அடுத்த நிமிடம் கரகர குரலில் ரேடியே அறிவித்தது. மிஸ்டர் பைலட் காலங்காத்தால தண்ணி போட்டுட்டு விமானத்தைக் கண்டபடி ஓட்டிகிட்டிருக்கீங்க இதெல்லாம் நல்லதுக்கில்லை உடனடியாத் திரும்பிடுங்க.

முனீர் சிரித்துக்கொண்டார் பதில் பேசவில்லை.

ரேடியோ மீண்டும் அலறியது. உங்களுக்குக் கடைசி சான்ஸ். மரியாதையா இப்பவே விமானத்தை யுர்டென் எடுங்க. இல்லாட்டி நாங்க உங்களைச் சுட்டு வீழ்த்திடுவோம் ஜாக்கிரதை.

அவர்கள் மிரட்டிக்கொண்டிருக்கும்போதே ரேடியோவை அணைத்துவிட்டார்முனீர்ரெட்ஃபா. மை டியர் ஆஃபீஸர்ஸ் இனிமேல் இது ஈராக் நாட்டு விமானம் இல்லை இஸ்ரேலுக்குச் சொந்தமானது.

அப்போதுான் ஈராக் இராணுவத்துக்கு நிலைமையின் தீவிரம் புரிந்தது. அவசரமாக மற்ற விமானிகளை அழைத்தார்கள். முனீர் ரெட்ஃபான் ஒரு பைலட் மிக் 21ஐக் கடத்தப் பார்க்கிறான். அவனைத் துரத்திப் போய் சுட்டுத் தள்ளுங்க என்று கட்டளையிட்டார்கள்.

ஆனால் அவர்கள் சுதாரித்தக்கொண்டு விமானத்தைத் திரும்புவதற்குள்முனீர் ரெட்ஃபா ரொம்பத் தூரம் போயிருந்தார். இனிமேல் அவரைக் கண்டுபிடித்துச் சுடுவதெல்லாம் சாத்தியமே இல்லை!

அந்த விமானத்தில் எவ்வளவு எரிபொருள் இருக்கு? பதற்றத்துடன் விசாரித்தது ஈராக். ஃபுல் டேங்க் என்று வந்தது. படுபாவிங்களா உங்களுக்கெல்லாம் அறிவே கிடையாதா? யாரைக் கேட்டு மிக்21க்கு முழு டேங்க் ரொப்பினீங்க? இப்ப அந்த பைலட் நம்ம விமானத்தை எங்கே கொண்டு போறானோ யாருக்குத் தெரியும்?

அதேநேரம் அங்கே இஸ்ரேலில் உளவாளிகளும் விமானப்படையும் தயார் நிலையில் இருந்தார்கள். முனீர் ரெட்ஃப்பாவையும் அவருடைய விமானத்தையும் பாதுகாப்புடன் அழைத்துவருவதற்காகக் கச்சிதமான திட்டம் தயாராகியிருந்தது. ஏற்கெனவே முடிவு செய்திருந்த இரகசியப்பாதையின் வழியே மிக்21 பத்திரமாக இஸ்ரேலுக்குள் வந்து இறங்கியது!

மிக்21 கடத்தல் திட்டம் மொசாட்டுக்கு மிகப் பெரிய வெற்றி. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பெரிய நாடுகளில் உளவுத்துறைகளெல்லாம் முயற்சி செய்து தோற்றுப்போன விடயத்தை மொசாட் சர்வ சாதாரணமாக ஊதித் தள்ளிவிட்டது.

இதனால் மொசாட் தலைவர் மியர் அமித் மீது மற்ற அதிகாரிகள், உளவாளிகள் இராணுவத்தினருக்கு இருந்த சந்தேகமெல்லாம் காணாமல்போனது. பார்ட்டி புத்திசாலிதான் என்று ஒப்புக்கொண்டு அவர் தோளைத் தட்டிக் கொடுத்தது இஸ்ரேல் அரசாங்கம்.

இன்னொருபக்கம் மூக்கு உடைந்த ஈராக் இராணுவமும் சோவியத் யூனியனும் கோபத்தில் குதித்தன. எங்களுக்குச் சொந்தமான விமானத்தை அநியாயமாகக் கடத்தி கடத்திட்டீங்க ஒழுங்கு மரியாதையா அதைத் திருப்பிக் கொடுத்துடுங்க இல்லாட்டி தொலைத்துடுவோம் என்று இஸ்ரேலை மிரட்டினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சஷிந்திர...

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நேற்றுக் காலை சஷிந்திர ராஜபக்ஷவை கைது செய்திருந்தனர்.

கடந்த அரசாங்கத்தின்போது சீன நிறுவனத்திடமிருந்து தரமற்ற கரிம உரத்தை இறக்குமதி செய்தமையால் அரசாங்கத்துக்கு நிதி இழப்புகள் ஏற்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## 14ஆம் திகதி...

மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## பாதிக்கப்பட்டவர்கள்...

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகியுள்ள சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்கு நேற்று இதனைத் தெரிவித்தார்.

மேலும் அன்றைய தினமே ஸ்கான் அறிக்கைகள் மற்றும் மண் பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (ம-7,33)

## கிளிநொச்சியில்...

சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான வாகனம் ஒன்று வீதியைக் கடக்க முற்பட்டவர் மீது மோதியதிலேயே இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. (ம-7,315,316)

## ஸ்கான் அறிக்கை...

நிலையாகியுள்ள சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7,33)

## மனித என்புத்...

செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் செருப்புடனும் இடுப்பில் தாயத்துடனும் மனித எலும்புக்கூட்டுத் தொகுதி ஒன்று இனங்காணப்பட்ட நிலையில் அது முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## தாயம், காசு...

செம்மணி மனிதப் புதைகுழியின் 2ஆம் கட்டத்தின் 32ஆம் நாள் அகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் தாயம், காசு, செருப்பு உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட சான்றுப் பொருட்கள் நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## சிசுவின் மனித...

செம்மணி மனிதப் புதைகுழியின் 2ஆம் கட்டத்தின் 32ஆவது நாள் அகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் 3 மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டது.

அதில் சிசு ஒன்றின் மனித எலும்புக்கூட்டுத் தொகுதி ஒன்றும் அகழ்ந்து எடுக்கப்பட்டது. (ம-7,33)

## செம்மணி...

பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கடத்தின் 32ஆம் நாள் அகழ்வு யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற்பார்வையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 6 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டதோடு ஏற்கெனவே இனங்காணப்பட்ட 3 மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணியில் இதுவரை 147 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் இனங்காணப்பட்டதோடு 133 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## சம்பூரில்...

ஒருவருடையது மற்றையது 25 - 40 வயதுக்குட்பட்ட ஒருவருடையது

அடுத்தது 40 - 60 வயதுக்குட்பட்ட ஒருவருடையது என்றும் நேற்றைய வழக்கு விசாரணையின்போது மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அவ்வறிக்கை குறித்து மன்றில் உரையாற்றிய சட்ட வைத்திய அதிகாரி,

இந்த இடம் மயானம் என்பதற்கு இதுவரை ஆதாரங்கள் முன்வைக்கப்படவில்லை. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்பு எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த எச்சங்களுக்குரியவர்கள் இயற்கையாக மரணம் அடைந்தார்களா? அல்லது ஏதேனும் குற்றச் செயல்கள் மூலம் மரணம் நிகழ்ந்ததா? என்பதைக் கண்டறிய மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இக்காணி அரச காணியாக உள்ள போதும் இங்கு ஒரு மயானம் இருந்ததற்குரிய ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று இந்த வழக்கு விசாரணையின்போது தொல்பொருள்திணைக்களம், பிரதேச செயலக செயலாளர் மற்றும் பிரதேச சபைச் செயலாளர் ஆகியோரால் அறிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த அறிக்கைகளை ஆராய்ந்த பின்னரே நீதிமன்று குறித்த பிரதேசத்தை அகழ்வுக்குட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய வழக்கு விசாரணையின்போது மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்கள அதிகாரி, புவிச்சரிதவியல் துறை அதிகாரி, பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர், தேசிய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர், மெக் மிதி வெடி அகற்றும் நிறுவனத்தினர், பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், காணாமல் ஆக்கப்பட்டோர் தேசிய செயலகத்தின் சட்டத்தரணி, பிரதேச காணி உத்தியோகத்தர், பிரிவிற்கான கிராம சேவை அலுவலர் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

கடந்த ஜூலை 19ஆம் திகதி மிதிவெடி அகற்றும் பணிகள் அப்பகுதியில் செயற்படுத்தப்பட்டபோது மனித மண்டையோடு, கால் எலும்பு என்பன கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்து கடந்த 23ஆம் திகதி சம்பவ இடத்தை மூதூர் நீதவான் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

அதனையடுத்து கடந்த 30ஆம் திகதி இவ்விடயம் தொடர்பில் மூதூர் நீதிமன்றில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய தினம் நீதிபதி விடுத்த அறிவிப்பின்படி நேற்றுப் புதன்கிழமை (6) நீதிமன்ற விசாரணைகள் மூதூர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே குறித்த காணியை அகழ்வுக்குட்படுத்துவது மன்று தீர்மானித்து அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்திருந்திருந்தது. (ம-7

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் 5913 — J 9 3 5 9 5 7
அத சம்பத — J 5 9 5 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0488
சுப தவசக் — திகதி 2025.08.06 — 0029 — துலாம் 04 14 36 43
தன நிதானய — திகதி - 2025.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் - 1943 — N 11 19 50 56 N — 57001
மெகா பவர் — திகதி 06/08/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2261 — X 21 39 40 55 56
ஜய — திகதி 2025.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் 0181 — K 7 8 7 1
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4155 — சீட்டிழுப்பு திகதி 06.08.2025 — K 29 62 69 70 — K
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் 1222 — சிம்மம் 24 31 39 52 சிம்மம் — 69061
சுபிரி தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 06.08.2025 — வெற்றி வாரம் 0621 — S 7 3 9 4 2 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,428,724.40
Super Ball — சீட்டிழுப்பு வாரம் 2887 — சீட்டிழுப்பு திகதி 2025.08.06 — தினம் புதன்கிழமை — 09 16 29 80 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
சனிதா — திகதி 06.08.2025 — வெற்றி வாரம் 5048 — 17 20 58 80 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000.00
ஜயோதா — திகதி 2025.08.06 — வெற்றி வாரம் 2150 — 10 11 32 53 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,896,503.60
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4599 — சீட்டிழுப்பு திகதி 06.08.2025 — தினம் புதன்கிழமை — 16 17 32 59 தனுசு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,010,912.40
கப்ருகா — K 03 08 28 48 68 — 2063 — 06.08.2025 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.586,411,926.20
அத கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம் 2713 — சீட்டிழுப்பு திகதி 2025.08.06 — 06 42 59 73 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,406,691.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் ...

உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் சிவில்சமூகத்தினரும் மதத்தலைவர்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருக்கும் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளிற்கும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கும் அனுப்பி வைத்த கடிதத்திற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கர் டேர்க் பதில் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், தனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கரிசனைகளை பிரதிபலிக்கும் விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கான தனது அறிக்கை இடம் பெற்றிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைக்கான தனது விஜயத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் பலருடனான தனது சந்திப்பு மிகவும் உணர்வுபூர்வமானதாகக் காணப்பட்டது என தெரிவித்துள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் செம்மணி மனிதப் புதைகுழிக்கான எனது விஜயமும் பாதிக்கப்பட்டவர்கள் சட்டத்தரணிகளைச் சந்தித்தமை அந்தப் பகுதியில் இடம்பெற்ற பெரும் நினைவுகூரலைப் பார்வையிட்டமையும் மிகவும் உணர்வுபூர்வமானதாகக் காணப்பட்டது எனத் தெரிவித்துள்ளார்.

எனது விஜயத்தின்போது எனது அலுவலகத்தின் முன்னைய அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கரிசனைகளை வலியுறுத்தினேன். இதன்போது இராணுவத்தினரின் பிடியில் உள்ள நிலங்களை விடுவித்தலின் அவசியம் வடக்குகிழக்கில் காணிகளை கையகப்படுத்துவதை நிறுத்துதல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைத்திருப்பவர்களை விடுதலை செய்தல் கண்காணிப்பு துன்புறுத்தலை முடிவிற்கு கொண்டு வருதல் பொதுமக்களின் நினைவுகூரும் நடவடிக்கைகளைக் குற்றமாக கருதுவதை விடுத்து அதற்கு ஆதரவளித்தல் போன்றவற்றையும் வலியுறுத்தினேன்.

இந்த விடயங்களிற்குத் தீர்வைக் காண்பது பாதிக்கப்பட்ட மக்கள் சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு மிக முக்கியமான ஒரு நடவடிக்கையாகும்.எனது விஜயத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் பலருடனான எனது சந்திப்பு மிகவும் உணர்வுபூர்வமானதாகக் காணப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கான எனது எதிர்வரும் அறிக்கை உங்களின் கரிசனைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் காணப்படுவதை நீங்கள் காண்பீர்கள் என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3590)
UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237


# கண்ணீர் அஞ்சலி



எமது நிலைய உறுப்பினரான **திரு. கே. பிரதீசன்** அவர்களின் அன்பு மாமனாரும் எமது நிலைய விளையாட்டு வீராங்கனை **பி. துஷ்யந்தி** அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் நவரத்தினம் குணசீலன்

நேற்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்

தோற்றம் 25.11.1962 | மறைவு 06.08.2025

பிரிவால் துயருறும்.....
கொக்குவில் மத்திய சன சமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும்

(C-3593)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3591)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

A/L - 2027 புவியியல்
N.BABU
(சனி, ஞாயிறு 9 a.m- 10 am)
• ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
• புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
• தனிப்பாட அனுமதி உண்டு.
(C-3578)
DMI ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
077 936 5087


உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்





விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3590)


# மரண அறிவித்தல்



பிறப்பு 17 - 09 - 1940 | இறப்பு 06 - 08 - 2025

## சங்கரப்பிள்ளை சந்திரசேகரம் (ஓய்வுபெற்ற அதிபர்)

புதுக்குடியிருப்பு 7ம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை சந்திரசேகரம் (ஓய்வுபெற்றஅதிபர் - மு/கைவேலி கணேசவித்தியாலயம்) அவர்கள் நேற்று 06.08.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற தில்லையம்பலம் - பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும் தெய்வநாயகம் அவர்களின் அன்புக் கணவரும் சஜிகுமார், துசியந்தன், துஷியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திரு.க.சுதாகரன்(அதிபர்- மு/சுதந்திரபுரம் தமிழ் மகாவித்தியாலயம்), திருமதி ச.ஆனந்தநாயகி, திருமதி து.ஜனனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 07.08.2025 வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்
077 243 5870

(C - 3588)

# 16 ஆவது நினைவாண்டும் 36 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



மலர்வு 07 . 08 . 1989 | உதிர்வு 19 . 01 . 2009

## அமரர். சிறிநிவாசன் சுபோதினி

அன்பின் சொல்லால் விளைந்த எம் செல்ல மகளே
உன்னைப் பறி கொடுத்து
நாம் படும் பாட்டை நீ அறிவாயோ?
பேச்சில் கனிவு காட்டி குணத்தில் தெய்வமாய் நின்றாயே
உன் செல்லச் சிரிப்பைக் காண
எம் கண்கள் தவம் கிடக்கிறது
மறுபடி வந்துவிடு எங்களிடம்

4 ஆம் வட்டாரம்,
... புதுக்குடியிருப்பு. (1418)

அன்புடன்: அம்மா, அப்பா, தம்பி, அண்ணாமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.